பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

06 03 2025 **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- உலகளாவிய கூட்டுறவு அமைப்புகளுடன், இந்திய கூட்டுறவுத்துறை இணைந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

- செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான புதிய திட்டங்களை மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்தார்.

- இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் மத்திய அரசு முன்னுரிமை அடிப்படையில் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருவதாக உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய் தெரிவித்துள்ளார்.

- ஐரோப்பிய நாடுகள் மற்றும் உக்ரைனின் பாதுகாப்பு குறித்து ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் இன்று அவசர ஆலோசனை மேற்கொண்டனர்.

- **Gurugram** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<>>>>>**

உலகளாவிய கூட்டுறவு அமைப்புகளுடன் இந்திய கூட்டுறவுத்துறை இணைந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று கூட்டுறவுத்துறையின் வளர்ச்சி குறித்த உயர்மட்ட ஆய்வுக்கூட்டத்தில் பேசிய பிரதமர், தாவர உற்பத்திப் பொருட்களை கூட்டுறவு அமைப்புகள் மூலம், அதிக அளவில் உற்பத்தி செய்து, ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

உணவு தானிய உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கூட்டுறவுத்துறையில் பணப்பரிவர்த்தனைக்கு யுபிஐ, ரூபே மற்றும் விவசாய கடன் அட்டைகள் ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கல்வி நிறுவனங்களில் கூட்டுறவுத்துறை தொடர்பான பாடங்களை அறிமுகம் செய்ய வேண்டும் என்றும் பிரதமர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் தேசிய கூட்டுறவு கொள்கை 2025-க்கான வரைவு அறிக்கை குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

ஒத்துழைப்பு மூலம், செழுமையை உறுதி செய்யும் தொலைநோக்கை எட்டும் வகையில், தேசிய கூட்டுறவுக்கொள்கையை கொண்டுவருவது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

கிராமப்புற பொருளாதாரத்திற்கு உத்வேகம் அளித்து, மகளிர் மற்றும் இளைஞர்களுக்கான வாய்ப்புகளை உறுதி செய்யவும் தேசிய கூட்டுறவுக்கொள்கை வழிவகுக்கிறது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா, கூட்டுறவுத்துறை செயலர் டாக்டர் அஷிஷ் குமார் **'Bhutani'**, பிரதமரின் முதன்மை செயலர்கள் டாக்டர் பி கே மிஸ்ரா, திரு சக்திகாந்த தாஸ் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

**<<<<<>>>>>**

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான புதிய திட்டங்களை மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்தார்.

இந்திய செயற்கை நுண்ணறிவு இயக்கத்தின்கீழ், செயற்கை நுண்ணறிவு தரவு தளம், கணினிவழி செயற்கை நுண்ணறிவு பயன்பாடு உள்ளிட்ட புதிய முயற்சிகளை அவர் இன்று தொடங்கிவைத்துள்ளார்.

மத்திய அரசின் பொதுத்துறை அதிகாரிகளுக்கான **iGOT, AI** எனும் மேம்பட்ட கர்மயோகி கற்றல் தளத்தையும் அமைச்சர்திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று தொடங்கிவைத்தார்.

**<<<<<>>>>>**

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான மின்னணு கட்டமைப்பு என்ற தலைப்பில் நாளேடு ஒன்றில் மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் எழுதிய கட்டுரையை பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், எதிர்காலத்திற்கான மின்னணு கட்டமைப்பை எவ்வாறு உருவாக்கி வருகிறோம் என்பதை அந்த கட்டுரையில் திரு அஷ்வினி வைஷ்ணவ் விரிவாக எடுத்துக்கூறியிருப்பதாகவும் கூறியுள்ளார்.

மின்னணு பொது கட்டமைப்பு, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், செமி கண்டெக்டர், மின்னணு பொருட்கள் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்த முக்கிய தகவல்கள் அந்த கட்டுரையில் இடம்பெற்றிருப்பதையும் பிரதமர் திரு நரேந்திர மோடி சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<>>>>>

தலைநகர் தில்லியில் வசந்த் கஞ்ச் வரையிலான கோல்டன் மெட்ரோ சுரங்கப்பாதை அமைக்கும் பணி இன்று நிறைவடைந்துள்ளது.

26 கிலோமீட்டர் தூரத்திற்கு அமைக்கப்பட்டுள்ள இந்த சுரங்க மெட்ரோ ரயில் பாதை, நான்காவது கட்ட விரிவாக்கத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டது.

இப்பணியின் நிறைவு நாள் விழாவில் மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு மனோகர்லால்., அத்துறைக்கான இணையமைச்சர் திரு **'Tokhan Sahu '** ஆகியோர் கலந்துகொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு மனோகர்லால், உலகின் மூன்றாவது பெரிய மெட்ரோ ரயில் கட்டமைப்பை இந்தியா உருவாக்கியுள்ளதாக தெரிவித்தார்.

இவ்வாண்டு டிசம்பர் மாதத்திற்குள் அமெரிக்காவின் நியூயார்க் நகர மெட்ரோ ரயில் கட்டமைப்பைவிட பெரியதாக இந்திய மெட்ரோ ரயில் கட்டமைப்பு அமையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நாடு முழுவதும் இதுவரை ஆயிரம் கிலோமீட்டர் தூரத்திற்கு மெட்ரோ ரயில் சேவை உள்ளதாக அவர் தெரிவித்தார்.

தில்லி கோல்டன் மெட்ரோ ரயில் கட்டமைப்பு பயன்பாட்டுக்கு வரும்போது தில்லி மற்றும் புறநகர் மக்களுக்கு தரமான போக்குவரத்து வசதி கிடைக்கும் என்று தெரிவித்தார்.

இப்பணியை வெற்றிகரமாக முடித்துத்தந்த அனைவருக்கும் தமது பாராட்டுகளை தெரிவிப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>

முற்போக்கான சமுதாயத்தை கட்டமைக்க, மக்கள் தீண்டாமை, சாதிய பாகுபாடு ஆகியவற்றிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற **Lokmata Ahilyabai Holkar** மகளிர் விருது வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ சமூகத்தை உருவாக்குவதே நமது நோக்கமாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல், சமூகத்தின் வளர்ச்சிக்கு பெண்கள் தங்களின் பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சமீபத்தில் தொடங்கப்பட்ட மாதிரி மகளிர் கிராம பஞ்சாயத்துகள் முன்னெடுப்பின்கீழ், பெண்களின் தலைமையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாதிரி கிராம பஞ்சாயத்து உருவாக்கப்படும் என்று திருமதி. அனுப்பிரியா பட்டேல் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு பங்காற்றிய 30-க்கும் மேற்பட்ட பெண்கள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

<<<<<>>>>>

இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் மத்திய அரசு முன்னுரிமை அடிப்படையில் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருவதாக உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தம்மை சந்தித்த ஒடிஷா மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களை சேர்ந்த 200-க்கும்மேற்பட்ட பழங்குடியின இளைஞர்களுடன் கலந்துரையாடிய அவர், தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சாலை மற்றும் ரயில் போக்குவரத்து வசதிகள் செய்துதரப்பட்டுள்ளதாகவும், புதிதாக பள்ளிகள்

திறக்கப்பட்டு, குழந்தைகளின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் சுதந்திரப்போராட்ட இயக்கத்தில் பழங்குடியின மக்களின் பங்கு மகத்தானது என்று குறிப்பிட்ட அவர், அவர்களின் கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

2027-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க பழங்குடியின இளைஞர்கள் பங்களிக்க வேண்டும் என்று திரு நித்யானந்த ராய் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

ஜம்மு காஷ்மீரில் உள்ள மூன்று தேசிய நீர்வழித்தடங்களில் சுற்றுலா சொகுசு படகு போக்குவரத்தை ஊக்குவிப்பதற்கான ஒப்பந்தம் ஜம்மு காஷ்மீர் அரசுக்கும், இந்திய உள்நாட்டு நீர்வழித்தட ஆணையத்திற்கும் இடையே இன்று கையெழுத்தானது.

ஸ்ரீநகரில் இன்று தொடங்கிய **‘Chintan Shivir ’**-நிகழ்ச்சியையொட்டி மத்திய நீர்வழி போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கான நிலத்தை ஜம்மு காஷ்மீர் அரசு வழங்குகிறது.

<<<<<>>>>>

அருணாச்சலப்பிரதேச சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் ஆளுநர் திரு. **Kaivalya Trivikram Parnaik** உரையுடன் இன்று தொடங்கியது.

ஆளுநர் தமது உரையில் வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட், 2047ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த அருணாச்சலப் பிரதேசத்தை உருவாக்குவதற்கான செயல்திட்டமாக இருக்கும் என்று கூறினார்.

வளர்ச்சியின் பயன்கள் மாநிலத்தின் அனைத்துப் பிரிவு மக்களையும் சென்றடையும் வகையில் அரசு திட்டங்களை நிறைவேற்றி வருவதாக ஆளுநர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஐரோப்பிய நாடுகள் மற்றும் உக்ரைனின் பாதுகாப்பு குறித்து ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் இன்று அவசர ஆலோசனை மேற்கொண்டனர்.

ஜெர்மன் நாட்டின் அடுத்த அதிபராக பதவியேற்க உள்ள திரு **‘Friedrich Merz** மற்றும் ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர் திரு ஆன்டனியோ கோஸ்டா உள்ளிட்ட தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

உக்ரைனுக்கான ராணுவ உதவிகளை அமெரிக்கா நிறுத்தியதையடுத்து, குறுகிய காலத்தில் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் ஆலோசித்தனர்.

**<<<<<>>>>>**

*__விளையாட்டுச் செய்திகள்__*

**Gurugram** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-3, 6-3 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Sahaja Yamanalapalli –**ஐ வென்றார்.

**<<<<<END>>>>>**